சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS. 279/2019

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிரேசி ஜாஸ்மின் புளோரா | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | சாமுவேல் கருத்தழகன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | பெங்களூர் | வயது | |

**24.01.2023** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 04.07.1985 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1,** 18.07.2005 தேதியிட்ட அசல் தான செட்டில்மென்ட் பத்திரம் **வா.சா.ஆ.2,** 27.01.2005 தேதியிட்ட சொத்து வரி ரசீது **வா.சா.ஆ.3,** 07.08.2019, 03.05.2017, 04.01.2015, 18.01.2010, 01.12.2008, 26.04.2007, தேதிகளிட்ட சொத்து வரிரசீதுகள் **வா.சா.ஆ.4 வரிசை,** 07.08.2019, 02.11.2017, 23.02.2015, தேதியிட்ட குடிநீர் வரி ரசீதுகள் **வா.சா.ஆ.5 வரிசை,** 03.02.2014, 16.07.2015, 05.08.2008, 11.08.2007, 10.12.2007, 13.02.2008, 16.08.2007, 09.06.2008, 08.04.2008, 04.10.2007 தேதியிட்ட மின் கட்டண ரசீதுகள் **வா.சா.ஆ.6 வரிசை,** 15.05.2017 தேதியிட்ட தான செட்டில்மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7,** 05.07.2017 தேதியிட்ட தான செட்டில்மென்ட் பத்திரம்சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8,** 05.07.2017 தேதியிட்ட தான செட்டில்மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9,** 05.07.2017 தேதியிட்ட தான செட்டில்மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10,** 27.09.2017 தேதியிட்ட கிரய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11,** வில்லங்க சான்று **வா.சா.ஆ.12,** வில்லங்க சான்று **வா.சா.ஆ.13,** 28.09.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.14**, 03.10.2017 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.15,** 12.10.2017 தேதியிட்ட வழக்கறிஞர்அறிவிப்பின் நகல் **வா.சா.ஆ.16,** அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.17**, வாதியின் வாக்காளர் அடையாள அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு நகல் குறியீடு செய்யப்பட்டது. **வா.சா.ஆ.18** தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.